# பொருளடக்கம்

## மஸ்ஜிதின் மாண்புகள்


| | | |
|---|---|---|
| 1. | முதற் பள்ளிவாயில் | — 9 |
| 2. | சொர்க்க மாளிகை | — 10 |
| 3. | நடையும், நற்கூலியும் | — 11 |
| 4. | பள்ளிவாசலும் பரகத்தும் | — 12 |
| 5. | இறை கௌரவிப்பு | — 12 |
| 6. | மலக்குகளின் துஆ | — 13 |
| 7. | பூமி அழுகிறது | — 13 |
| 8. | பூமி மகிழ்கிறது | — 14 |
| 9 | மலக்குகளின் உதவி | — 14 |
| 10. | பள்ளித் தொழுகை | — 15 |
| 11. | பள்ளிவாசலின் ஒழுக்க நெறிகள் | — 16 |


## ஜும்ஆ நாளின் தனிப்பெரும் சிறப்புகள்


| | | |
|---|---|---|
| 1. | ஜும்ஆவின் கடமை பற்றி திரு குர்ஆன் | — 21 |
| 2. | ஜும்ஆவின் சிறப்பைப் பற்றி திருநபி (ஸல்-அம்) | — 22 |
| 3. | ஜும்ஆவின் சிறப்பைப் பற்றி திருநபித் தோழர்கள் | — 23 |
| 4. | ஜும்ஆ பற்றிய வரலாற்றுப் பின்னணி | — 25 |
| 5. | சமுதாயம் சிந்திக்க 'சரித்திரம்' பேசுகிறது | — 27 |
| 6. | கருணை நபி (ஸல்) அவர்களின் கோபம் | — 31 |
| 7. | ஜும்ஆ விளக்கம் | — 33 |
| 8. | விண்ணகத்தில் ஜும்ஆத் தொழுகை | — 35 |
| 9. | வெள்ளி தந்த வெற்றிகள் | — 37 |
| 10. | சீரழிவில் சில நபர்கள் | — 39 |
| 11. | இறை சாந்தி என்றும் பொழிக | — 41 |


—★—

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

# மஸ்ஜிதின் மாண்புகள்

நாம் பள்ளிவாசல் என்று கூறுவதே அரபு மொழியில் 'மஸ்ஜித்' என வழங்கப்படுகிறது.

மஸ்ஜித் என்னும் இச்சொல்லுக்கு, ''அல்லாஹ்வின் முன்னே ஒருவன் சிரம் பணிந்து — சிரம் பதித்து வணங்கும் இடம்'' எனப் பொருளாகும்.

மஸ்ஜிதின் மாண்பையும் மகத்துவத்தையும் நமக்கு எடுத்தோதுகின்ற இறை வசனங்களும், இறுதித் தூதர் எம்பெருமானார் (ஸல்) அவர்களின் அருள்மொழிகளும் ஏராளம் இருக்கின்றன.

அவைகளில் சிலவற்றை இங்கே பாரீர்! இறையருளைப் பெறுகின்ற வழிமுறை காணீர்!!

—★—

## 1. முதற் பள்ளிவாயில்!

புனித மக்காவைத் துறந்து மதீனாவுக்கு ஹிஜ்ரத் செய்த போது அண்ணலெம் பெருமானார் (ஸல்) அவர்கள் மதீனாவுக்கு மூன்றுமைல் தொலைவிலுள்ள 'குபா' எனும் ஊரில் பதினான்கு நாட்கள் வரை தங்கி இருந்தார்கள்.

அப்பொழுது அங்கே ஒரு பள்ளிவாசல் கட்டப்பட்டது.

அதன் கட்டுமானப் பணிகளில் எம்பெருமானார் (ஸல்) அவர்கள் மும்முரமாக ஈடுபட்டார்கள். தங்களின் திருக் கரத்தால் அடிக்கல் நாட்டியதுடன் கட்டிட வேலையின் போது தங்களின் அருமைத் தோழர்களுடன் பளுவான கற்களைத் தூக்குவது முதற்கொண்டு அனேக வேலைகளிலும் பங்கு வகித்தார்கள். அல்லாஹ் சுப்ஹானஹூவதஆலாவை வணங்க அண்ணலார் நபி (ஸல்) காலத்தில் எழுப்பப்பட்டு முதற்பள்ளிவாயில் இதுதான் என்று சரித்திரம் நமக்கு சான்று பகர்கிறது.

—✶—

## 2. சொர்க்க மாளிகை

அல்லாஹ்வின் அருள்மறை கூறுகிறது:

''எவர்கள் அல்லாஹ்வையும், இறுதி நாளையும் நம்பி, தொழுகையையும் கடைப்பிடித்து ஜக்காத்தும் கொடுத்து வருவதுடன் அல்லாஹ்வைத் தவிர வேறெவருக்கும் பயப்படாமலும்இருக்கிறார்களோ அவர்கள்தாம் அல்லாஹ்வுடைய பள்ளிகளை நிர்மாணிக்கக் கூடியவர்கள்; இத்தகையோர்தாம் நேரான வழியில் இருப்பதாக நம்பத் தக்கவர்கள்''

(சூரத்துத் தௌபா)

நபி பெருமானார் (ஸல்) நவின்றுள்ளார்கள்:

''அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தை நாடி யார் பள்ளிவாசலைக் கட்டுகிறாரோ, அல்லாஹ் அவருக்கு சொர்க்கத்தில் வீட்டைக் கட்டுகிறான்.'' (முத்தஃபகுன் அலைஹி)

''எவர்கள் தங்களின் வீடுகளிலேயே ஒலு (அங்கசுத்தி) செய்து அல்லாஹ்வின் இல்லங்களில் ஒன்றின்பக்கம் அவனது கடமைகளில் ஒன்றை நிறைவேற்ற நடந்து வருகின்றாரோ அவரது காலடிகளில் ஒன்றுக்கு ஒரு பாவம் மன்னிக்கப்பட்டு மற்றொன்றுக்கு ஒரு பதவி உயர்த்தப்படுகிறது.'' (முஸ்லிம்)



## 3. நடையும், நற்கூலியும்

ஹஸ்ரத் ஜைத் பின் தாபித் (ரலி) அறிவிக்கிறார்கள்:

''நான் ஒருமுறை நபி பெருமானார் (ஸல்) அவர்களுடன் தொழுகைக்காக பள்ளி நோக்கி நடந்து வந்து கொண்டு இருந்தேன்.

அவ்வமயம், அண்ணலார் நபி (ஸல்) அவர்கள் தங்களின் புனிதப் பாதங்களை மிக நெருக்கமாக எடுத்து வைத்து நடந்து வந்து கொண்டிருந்தார்கள்.

இதை நுணுக்கமாக கவனித்தவண்ணம் உடன் நடந்த என்னைப் பார்த்து,

''நான் ஏன் இவ்வாறு எனது காலடிகளை நெருக்கிவைத்து பொடி நடை நடந்து வருகின்றேன் என்பது உங்களுக்குத் தெரியுமா?'' எனப் பெருமானார் (ஸல்) அவர்கள் வினவ,

'அல்லாஹ் வும் அவனது திருத்தூதர் அவர்களுமே நன்கு அறிவார்கள்!' என்று கூறினேன் நான்.

அப்பொழுது அண்ணலார் நபி (ஸல) அருளினார்கள்:

''தொழுகையை நாடி அடியான் காலடி எடுத்து வைக்க ஆரம்பிப்பதிலிருந்தே அவன் தொழுகையில் இருப்பதாகக் கருதப்படுகிறான்.''

மற்றொரு அறிவிப்பில்,

தொழுகைக்காக எனது காலடிகள் அதிகம் எடுத்து வைக்கப் படுவதை விரும்பியே இவ்வாறு செய்தேன் என்பதாகத் தெரிவித்தார்களென்றும் வந்துள்ளது.

—★—

## 4. பள்ளிவாசலும் பரக்கத்தும்

மதீனத்து அன்ஸாரிகளில் பனூஸலம் கோத்திரத்தாரின் வீடுகள் பள்ளிவாசலில் இருந்து வெகு தொலைவில் அமைந்திருந்தன. இதன் காரணமாக, அவர்களின் மனதில்,

'நாம் பள்ளிவாசலுக்கு அண்மையில் குடிபெயர்ந்தால் பள்ளிவாசலின் பரக்கத் கிடைக்கப் பெறுவோமே. மேலும் வணக்க வழிபாடுகளுக்கும் பள்ளியை அடைய எளிதாகுமே' என்ற எண்ணம் மேலோங்கியது.

ஆனால் எக்கணம் எம்பெருமானார் (ஸல்) அவர்களின் திருநாவால் பள்ளிவாசலுக்கு நடந்து வருகின்றதால் கிடைக்கின்ற நன்மை பற்றியும் அதற்கென எடுத்து வைக்கின்ற ஒவ்வொரு காலடிக்கும் எழுதப்படுகின்ற நற்கூலி பற்றியும் அறியலானார்களோ அப்பொழுதே தங்களின் குடிபெயர்ப்பு எண்ணத்தை மாற்றிக் கொண்டார்கள்.

எங்களின் வீடுகள் பள்ளியிலிருந்து தொலைவிலேயே இருக்கட்டும். ஏனெனில் இதனால் எங்களின் நடைகளுக்கும் அதிக நன்மை கிடைக்கிறது எனக் கூறி மகிழ்ந்தார்கள்.

—★—

## 5. இறை கௌரவிப்பு

அல்லாஹ் தன் வேதமொன்றில் கூறியுள்ளதாக அருமை நாயகம் (ஸல்) அறிவிக்கிறார்கள் :

'பூமியில் எனது வீடு பள்ளிவாசலாகும். மேலும் அதனை நிலைபெறச் செய்பவர் அங்கே வந்து என்னைத் தரிசிப்பவர் ஆவார்.

''யார் தன் வீட்டில் ஒலூ செய்து எனது இல்லம் வந்து என்னை தரிசிக்கிறாரோ (வணக்கம் புரிகிறாரோ) அவருக்கு எனது நன்மாராயம் உண்டாகட்டும்.''



''ஏனெனில், தரிசிக்கவந்தவரை கௌரவிக்க வேண்டியது தரிசிக்கப் பட்டவனின் கடமையாகிறது.''

(அந்த அடியானின் பிரார்த்தனைகளை அங்கீகரித்து அவர் மீது தனது கிருபையைக்காட்டுவதே இங்கு இறைகௌரவிப்பு எனப் பொருள்படும்.)

—★—

## 6. மலக்குகளின் துஆ

எவர் தனது தொழுகுமிடத்தில் அமர்ந்திருக்கிறாரோ அவருக்காக வானவர்கள் கீழ்க்கண்டவாறு பிரார்த்தனை புரிகின்றார்கள் :

''யா அல்லாஹ்! இந்த அடியானின் மீது உன் விசேஷ அருளைப் பொழி.''

''இவர்மீது நீ கிருபை காட்டு! இவரை நீ உன்னருளால் மன்னித்தருள்!''

எதுவரை அத்தொழுகையாளி தம் தொழுகை இடத்தை விட்டு அகலவில்லையோ அல்லது அவருடைய ஒலூ முறியவில்லையோ அதுவரை அவருக்காக அவ்வானவர்களின் துஆ தொடர்கிறது.

—★—

## 7. பூமி அழுகிறது

ஹஸ்ரத் அலீ (ரலி) அறிவிக்கிறார்கள் :

இறையடியான் ஒருவன் இறக்கின்ற தருணத்தில் பூமியிலே அவன் தொழுத இடமும், வானத்தில் எங்கு அவனுடைய நற்செயல்கள் மேல் நோக்கிச் சென்றனவோ அதுவும் அவனுக்காக கண்ணீர் சிந்துகின்றன.

ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அறிவிக்கிறார்கள் :

''நாற்பது நாட்கள் வரை, மரணமான அந்த நல்லடியானுக்காக பூமி அழுது துக்கம் அனுஷ்டிக்கிறது.

ஹஸ்ரத் அதா குராஸானி கூறுகிறார்கள் :

பூமியின் எப்பகுதியிலேனும் யாரொருவர் அல்லாஹ்வுக்காக ஒரு சஜ்தா செய்திருப்பாரோ நியாயத் தீர்ப்பு நாளன்று அவருக்காக அந்த பூமி சாட்சி பகரும். அன்றி, அவருடைய மரணத்தை முன்னிட்டு அது அழும்.

—★—

## 8. பூமி மகிழ்கிறது

''பூமியின் எந்தப் பகுதியில் தொழப்படுகிறதோ அல்லது அல்லாஹ்வை தியானிக்கப் படுகிறதோ அப்பகுதி இப்பூவுலகின் பிற பகுதிகளைக் கண்டு பெருமைப் படுகிறது.''

''மேலும், அப்பூமி அல்லாஹ்வின் திக்ருடைய காரணமாக மகிழ்ச்சியடைகிறது. அம்மகிழ்ச்சியின் அடையாளங்கள் ஏழு பூமிகள் வரை ஊடுருவிச் செல்கின்றன. மேலும் அது அந்த வணக்கவாளனுக்காக அலங்காரமாகி விடுகிறது.

''எங்கு மனிதர்களின் கூட்டமொன்று சென்றிறங்கி தொழுகையிலும் இன்னும் பிற வணக்கங்களிலும் தங்களை ஈடுபடுத்திக் கொள்கிறதோ, அவர்களுக்காக அப்பிரதேசம் அல்லாஹ்வின் சன்னதியில் அருள் கோரிப் பிரார்த்திக்கிறது.

''அல்லது அவர்களின் இறை மறதி காரணமாக அது அவர்களைச் சபிக்கிறது.''

—★—

## 9. மலக்குகளின் உதவி

பள்ளிவாசலில் குழுமி இருப்பவர்கள், அதை விட்டும் பிரிந்து செல்ல மனமில்லாதவர்கள், இத்தகையவர்கள் வானவர்களுடன் நெருங்கி இருப்பவர்களாவார்கள்.



இவர்கள் சில வேளை தவிர்க்க முடியாத தேவைகளை முன்னிட்டு பள்ளிவாசலை விட்டும் தகர்ந்து செல்ல நேரிடின், அப்பொழுது வானவர்கள் இவர்களைத் தேடி அலைகிறார்கள்; இவர்கள் நோய்வாய்ப்படின், இவர்களை நலம் விசாரிக்க வருகை தருகிறார்கள்; இவர்கள் ஏதேனுமொரு வேலையில் ஈடுபட்டிருக்கும் போது அவ்வானவர்கள் இவர்களுக்கு அவ்வேலையில் ஒத்தாசை புரிகின்றார்கள்.

''பள்ளிவாசலில் அமர்ந்திருப்பவர் அல்லாஹ்வின் அருளை எதிர்நோக்கி இருப்பவராவார்.'' (மஸ்னத் அஹ்மத்)

—★—

## 10. பள்ளித் தொழுகை

அண்ணலெம் பெருமானார் (ஸல்) அருளியுள்ளார்கள் :

★ காலையும் மாலையும் தொழுகைக்காக பள்ளிவாசல் செல்வது அல்லாஹ்வின் பாதையில் அறப்போர் (ஜிஹாத்) புரியப் புறப்படுவது போன்றாகும்.

★ பள்ளி நோக்கிச் சென்று ஜமாஅத்துடன் தொழுபவரை, அவர் உண்மை முஃமின் என்பதற்கு நீங்கள் சாட்சிகளாக இருங்கள்.

★ யார் அதிகாலை இருளில் பள்ளி செல்கின்றாரோ, இறுதி நாளில் அவருடன் முழுமையான ஒளி இருக்கும்.

★ 'ஜமாஅத்துடன் கலந்து தொழுவதற்காக பள்ளி செல்பவரின் நன்மையையும், முயற்சியையும் வீணாக்க மாட்டேன்' என்று இறைவனே அவற்றுக்கு பொறுப்பேற்றுக் கொள்கிறான்.

★ ஓர் ஊரில் மூன்று முஸ்லிம்கள் இருந்தும் அவர்கள், ஜமாஅத்தாக தொழவில்லையானால் அவர்களை ஷைத்தான் ஆக்கிரமித்துக் கொள்கிறான்.

★ ஜமாஅத் தொழுகை, தனித்தொழுகையைவிட இருபத்தி ஏழு மடங்கு அதிக நன்மைகளைப் பெற்றுத் தருகிறது.

★ எவர் முஸ்லிமான நிலையில் அல்லாஹ்வைச் சந்திக்க ஆசிக்கின்றாரோ, அவர் ஐவேளைத் தொழுகையை ஜமாஅத்துடன் நிறைவேற்றுவாராக!

★ யாருடையமனம் மஸ்ஜிதுகளிலேயே தொங்கியவண்ணம் இருந்து கொண்டிருந்ததோ அவர் இறுதித்தீர்ப்புநாளின் போது அல்லாஹ்வின் நிழலிலே இடம் பெறுவார். 'அவர் அல்லாஹ்வுடைய அர்ஷின் நிழலிலே இடம் பெறுவார்' என்றும் ஓர் அறிவிப்பில் வந்துள்ளது.

(ஹதீதுகளின் கருத்துக்கள்)

★ இருள் சூழ்ந்த இரவு வேளையில் பள்ளிவாசலை நோக்கி நடப்பதானது சொர்க்கத்தைக் கடமையாக்குகின்ற நற்காரியமாகும்' என்பது நாயகத் தோழர்கள் யாவரின் ஒருமித்தக் கருத்தாக இருந்துவந்ததென ஹஸ்ரத் இமாம் நக்யீ (ரஹ்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

—★—

## 11. பள்ளிவாசலின் ஒழுக்க நெறிகள்

★ இறையச்சத்துடன் பள்ளியில் நுழையுங்கள்.
நுழையும் போது முதலில் வலது காலை எடுத்து வைத்து ஸலவாத்துக் கூறியபின்,
''அல்லாஹும்மஃப்தஹ்லீ அப்வாப ரஹ்மத்திக்க'' என்ற துஆவை ஓதுங்கள்.

★ பள்ளியை விட்டும் வெளியேறும் போது முதலில் இடது காலை எடுத்து வைத்து.
அல்லாஹும்ம இன்னீ அஸ்அலுக மின் பள்லி ரஹ்மதிக. என்ற துஆவை ஓதுங்கள்.



பள்ளிவாசலுள் நுழைந்ததும் அங்கே அமரும் முன்பாக இரண்டு ரக்அத் நஃபில் 'தஹிய்யத்துல் மஸ்ஜித்' தொழுது கொள்ளுங்கள்.

★ சிரித்துப் பேசியபடி பள்ளியினுள் நுழையாதீர்கள். இது ஒழுக்கக் கேடர்களின் செயலாகும். அங்கே உலக சம்பந்தமான பேச்சுக்களைப் பேசாதீர்கள். மஸ்ஜிதில் கூச்சலிடுவது, கேலி வேடிக்கை செய்வது, விலை விசாரிப்பது, வியாபாரம் செய்வது ஆகியவை மஸ்ஜிதை அவமதிக்கும் காரியங்களாகும்.

''இறுதி காலத்தில் எனது சமூகத்தவர்களில் சிலர் பள்ளிக்கு வருவார்கள்; அங்கே வட்டமிட்டு அமர்வார்கள்; உலக விஷயங்களைப் பேசுவார்கள். மேலும் அவர்கள் உலகையே நேசிப்பவராகவும் இருப்பார்கள்.

நீங்கள் அவர்களுடன் அமராதீர்கள்; அல்லாஹ்வுக்கு அவர்களின் தேவை ஏதுமில்லை. அல்லாஹ் அவர்களை வெறுக்கிறான்'' என்ற திருநபி (ஸல்) அவர்களின் திருவாக்கை நெஞ்சில் நிறுத்துங்கள்.

★ பள்ளிவாசலின் பரிசுத்தத் தன்மையில் அக்கறையாக இருங்கள்.

அங்கே அசுத்தம் செய்ய இடமளிக்காதீர்கள். அங்குள்ள குப்பை செத்தைகளை அப்புறப் படுத்துங்கள்.

அங்கே நறுமணப் பொருட்களை உபயோகியுங்கள், குறிப்பாக ஜும்ஆ நாளன்று இதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யுங்கள். இவை சொர்க்கத்தை வழங்குகின்ற நற்செயல்களாகும்.

''பள்ளிவாசலின் குப்பை கூளங்களை அகற்றி அதைச் சுத்தப்படுத்துவதானது அழகுமிகுந்த கண்களுடைய சொர்க்க

கன்னியரின் மஹராக உள்ளது'' என எம்பெருமானார் (ஸல்) அவர்கள் இயம்பியுள்ளார்கள்.

பாங்கு தொழுகை முதலியவை அதனதன் நேரங்களில் சரியானபடி நடைபெற ஆவன செய்யுங்கள்.

இறையச்சமுள்ள, தகுதி மிகுந்த, தீன் சேவையைக் குறிக்கோளாகக் கொண்ட நல்லோர்களை இப்புனிதப் பணிகளுக்கு நியமனம் செய்யுங்கள்.

இத்தகையோர் மார்க்க விஷயங்களிலும், நற்குணத்திலும் பேணுதல் கொண்டு விளங்க வேண்டும். இவர்களைக் கண்ணியப் படுத்துவதும், இவர்களின் உலகப் பிரச்சினைகளுக்குரிய தேவைகளை நிவர்த்தி செய்வதும் உங்கள் கடனாகும்.

மஸ்ஜிதின் நிர்வாகப் பொறுப்பிற்குத் தேர்ந்தெடுக்கப் படுகிறவர் நேர்மை, திறமை, மார்க்க விஷயங்கள் பற்றிய அறிவு ஆகியவைகளில் சிறந்து விளங்குபவராக இருக்க வேண்டும்.

எனவே இதுபோன்ற பொதுப் பதவிகளில் அமர்த்தப் படுகின்ற நபர் இஸ்லாமிய ஷரீஅத் சட்ட திட்டங்களைக் கற்றுத் தேர்ந்தவராக இருக்க வேண்டியது மிக முக்கியம். பள்ளி நிர்வாகப் பொறுப்பை ஏற்பவர் 'ஃபாஸிக்' ஆக, விலக்கத்தக்க (ஹராம்) தொழில் செய்பவராக இல்லாமல் இருக்கும்படி கவனம் செலுத்த வேண்டியது ஜமாஅத்தாரின் கடமையாகும்.

''அல்லாஹ் வழங்கிய பரிசுத்தத் திருமறையையும், அண்ணலெம் பெருமானார் (ஸல்) அவர்களின் வழிமுறையையும் நன்கு கற்றறிந்த ஒருவர் ஜமாஅத்தில் இருப்பது நல்லபடி தெரிந்திருந்தும், வேறொருவரை பள்ளி பொறுப்பில் அமர்த்துபவர், திட்டமாக அல்லாஹ்வையும் அவனது திருத்தூதரையும் முஸ்லிம் ஜமாஅத்தார் அனைவரையும் ஏமாற்றியவராகிறார்.''

(திப்ரானி)



★ ஆறவே விபரமற்ற சின்னஞ்சிறு பிள்ளைகளை பள்ளியினுள் அழைத்துப் போகாதீர்கள். அவர்கள் அங்கே அசுத்தப் படுத்தவும், பள்ளியின் புனிதம் புரியாத காரணத்தால் தொழுகையாளிகளுக்கு இடையூறு — இம்சை செய்ய ஏதுவாகும்.

★ அதே நேரம் விபரம் புரிந்த ஓரளவு மஸ்ஜிதின் மாண்பையுணர்ந்த சிறார்களை உங்களுடன் அழைத்துச் செல்வதை வழமைப் படுத்துங்கள்.

★ தாய்மார்களும் தங்களின் பிள்ளைகளுக்கு ஆர்வமூட்டி பள்ளிவாசலுக்கு அனுப்புகின்ற பழக்கத்தை உருவாக்க வேண்டும்.

★ ஜமாஅத் தொழுகையின் போது ஸஃப்ஃபுகள் வரிசையாக, நேராக, தோளோடு தோள் இணைந்திருக்கும்படி இடைவெளியின்றி நிற்கும்படி கவனிக்க வேண்டும். முன்வரிசை நிரம்பும் முன்பே இரண்டாவது வரிசையை ஆரம்பிக்காதீர்கள்.

''வரிசையைச் சேர்ப்பவரை அல்லாஹ் சேர்க்கின்றான்— அதைப் பிரிப்பவரை அல்லாஹ் பிரித்து விடுகின்றான்.''

★ பள்ளிவாசலிலும் தொழுகையிலும் நீங்கள் கடைப்பிடித்து ஒழுகுகின்ற ஒழுக்க நெறிகளை — பேணுதலை இவற்றுக்கு வெளியிலும் நடைமுறைப்படுத்துங்கள். வெட்கக்கேடான இறைப் பொருத்தத்திற்கு மாறான துர்க்காரியங்களில் ஈடுபடாதீர்கள்.

ஏனெனில் அவ்வுயர் ஒழுக்க நெறிகள் பள்ளிவாசலில் மட்டுமின்றி வெளி வாழ்க்கையிலும் அனுஷ்டிக்க வேண்டியது அவசியம்.

பள்ளிவாசல்கள் நமது வாழ்வின் கேந்திரமாகவும், பயிற்சி சாலையுமாகத் திகழ்கின்றன. அப்பயிற்சியின் பிரதிபலிப்பு முழுவாழ்விலும் பளிச்சிட வேண்டும்.

★ பள்ளியில் யாருக்கும் தொந்தரவு கொடுக்காதீர்கள்.

தள்ளிக் கொண்டும், தாண்டிக் கொண்டும் அங்கே முன்னேறுவது, அடுத்தவர் அருவருப் படும்படி அழுக்குத் துணிகளை உடுத்தி வருவது, வாய் நாற்றத்துடன் வருவது, சப்தமிட்டு கொட்டாவி, ஏப்பம் விடுவது, தொழுகையில் நின்றதும் இருமத் துவங்குவது, கனைப்பது, ஆடவும், அசையவும் செய்வது, இவை யாவும் கட்டுப்படுத்தப்பட வேண்டும்; தவிர்க்கப்பட வேண்டும்.

நம்மால் பிறருக்கு எந்த வகையிலும் இன்னலோ, இடைஞ்சலோ ஏற்பட்டு விடலாகாது.

★ மார்க்க அறிவு வளர்வதால்தான் பள்ளிவாயில்கள் புத்துயிர் பெறுகின்றன. ஒழுக்கம் பரவுகிறது; தீன் நிலை பெறுகிறது.

ஆதலினால் பள்ளிவாசல்களிலும் அதன் சார்பாகவும் அவசியம் குர்ஆன் மத்ரஸாக்களை, தீனிய்யாத் பாடசாலைகளை நிறுவுவதுடன் ஒவ்வொரு பெற்றோரும் தங்களின் பிள்ளைகளை தவறாது அங்கே அனுப்பி மார்க்கக் கல்வி பயில ஆவன செய்ய வேண்டும்.

இவை வெறும் பெயருக்காக மட்டுமே இயங்குகின்றவைகளாக இல்லாமல் சரியான முறையில் தேவையான பாடத் திட்டங்களை அமுல்படுத்தி பயன் தருபவைகளாக நிர்வகிக்கப் படவேண்டும்.

ஹல்ரத் அலீ (ரலி) அவர்கள் கூறினார்கள்:

''தந்தையை இழந்தவன் எத்தீம் அல்ல.''

''மார்க்கக் கல்வியும்-ஒழுக்கமுமற்றவனே உண்மையான எத்தீம் (அனாதை)'' என்பதை சிந்தையில் கொள்ளுங்கள்.

—★—

# ஜும்ஆ நாளின் தனிப்பெரும் சிறப்புகள்

—★★—

## 1. ஜும்ஆவின் கடமை பற்றி திரு குர்ஆன்

'அல்லாஹு லதீஃபும் பி இபாதிஹி' — 'அல்லாஹ் தன் அடியார்களின் பேரில் ஆழ்ந்த கருணை உடையவன்' என பரிசுத்தத் திருமறை பகர்கிறது.

'மக்களை ஈன்றெடுத்து பராமரிக்கும் எழுபது அன்னையர்களை விட அல்லாஹ் தன் அடியார்களின் பேரில் அன்பு மிக்கவன்' — எனத் திருநபி (ஸல்-அம்) அவர்கள் திருவாய் மலர்ந்தருளியுள்ளார்கள்.

எனவே, அன்னையினும் அன்புடைய அல்லாஹ் தன் அடியார்களின் மீது தனது அளவற்ற அருட்கொடைகளையும், வெகுமதிகளையும் அள்ளிச் சொரிய, அவர்களுக்குச் சில அரிய நல்வாய்ப்புகளை ஈந்து அதிலே அவர்கள் புரிகின்ற நற்செயல்களுக்கு ஏனைய நாட்களில் — ஏனைய சந்தர்ப்பங்களில் வழங்குகின்ற நன்மைகளை விட, பன்மடங்கு அதிகமான நன்மைகளை — நற்கூலிகளை அள்ளித் தந்து அவர்களை உயர் பதவி உடையவர்களாகவும் பாவத்தை விட்டும் பரிசுத்தவான்களாகவும் ஆக்கியருளுகின்றான்.

அவ்வாறு அல்லாஹ்வால் அருளப் பட்டுள்ள அரிய பல சந்தர்ப்பங்களில் 'ஜும்ஆ நாள்' சிறந்து விளங்குகிறது.

அந்நாளின் முக்கியத்துவத்தை அல்லாஹ் தன் திருமறையில் அறைகூவல் விடுவதை இங்கே காணுங்கள்:—

ஜும்ஆ நாளில் தொழுகைக்காக அழைக்கப்பட்டதும், அல்லாஹ்வை நினைவுகூர்ந்து (வணங்குவதற்காக பள்ளி வாசலை நோக்கி) விரைந்து செல்லுங்கள்.

'இன்னும் அந்நேரத்தில் உங்கள் கொடுக்கல் வாங்கல் களையும் நிறுத்தி விடுங்கள்.'

'நீங்கள் நல்லறிவு உடையோராயின் இது உங்களுக்குப் பெரிதும் நன்மையுள்ளது (என்பதை உணர்வீர்கள்)'

(சூரத்துல்-ஜும்ஆ)

—★—

## 2. ஜும்ஆவின் சிறப்பைப்பற்றி திரு நபி (ஸல்-அம்)

கதிரவன் தோன்றும் நாட்களில் சிறந்த நாள் வெள்ளிக்கிழமையே!

ஏனெனில் அன்றுதான் மனித குலத்தின் ஆரம்பத் தந்தை ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் படைக்கப் பட்டார்கள்.

அன்றுதான் அவர்கள் சுவனபதியில் குடியேற்றப் பட்டார்கள்.

அன்றைய தினமே அங்கிருந்து வெளியேற்றவும் பட்டார்கள்.

அவர்கள் மரணமடைந்ததும் அன்றுதான். மேலும்,

அன்றைய தினமே உலக முடிவு நாள் (கியாமத்) ஏற்படும்.

''எவர் வெள்ளி தினத்தில் குளித்து நல்லாடை தரித்து நறுமணம் பூசி பள்ளிவாசலுக்குச் சென்று அமைதியுடன்



அமர்ந்து குத்பா பிரசங்கத்தைக் கேட்கிறாரோ, அதன் பிறகு தொழுகையை நிறைவு செய்கிறாரோ, அவரின் பாவங்கள் அந்த ஜும்ஆ முதல், மறு ஜும்ஆ வரை மன்னிக்கப் படுகின்றன.

வெள்ளிக்கிழமையில் ஒருநேரம் உண்டு. அதில் அல்லாஹ் விடம் அடியான் நெருங்கிக் கேட்கும் பிரார்த்தனை அவசியம் அங்கீகரிக்கப் படுகிறது.''

அந்நாளில் அல்லது அதன் இரவில் முஃமினானவன் மரணித்து விட்டால் அவனை அல்லாஹ் கப்ருடைய சோதனையை விட்டும் காப்பாற்றியருளுகின்றான்.

யார் அலட்சியமாக மூன்று ஜும்ஆக்களை தவற விட்டு விடுவாரோ, அவரது இதயத்தில், அல்லாஹ் முத்திரையிட்டு விடுகிறான்.

பின்னர் இத்தகையோர் நன்மையையும், தீமையையும் பிரித்தறியும் பேராற்றலை இழந்து விடுகிறார்கள்.

'மனம் அறிந்து ஜும்ஆவைப் புறக்கணிப்பவர்கள் பெரும் பாவியாவார்கள்.'

மெய்யாக வெள்ளிக்கிழமை, நாட்களில் தலைமையான தாகும்.

அது அல்லாஹ்விடம் மிக்க மதிப்புடையது.

மேலும், அது 'ஈதுல் ஃபித்ரு—ஈதுல் அள்ஹா' போன்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க இரு பெருநாட்களை விடவும் விசேஷ சிறப்பு பொருந்தியதுமாகும்.

—★—

## 3. ஜும்ஆவின் சிறப்பைப் பற்றி திருநபித் தோழர்கள்

ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்களிடம் ஒரு மனிதர் வருகை தந்து விசாரிக்கலானார்:

ஹல்ரத் இப்னு அப்பாஸ் அவர்களே!

ஒரு மனிதர் இறந்துவிட்டார். அவர் ஜும்ஆவும் தொழவில்லை. ஜமாஅத் தொழுகையிலும் பங்கேற்கவில்லை. இவருடைய நிலை என்ன?

இதற்கு ஹல்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் பளிச்சென்று பதில் கூறினார்கள் :

'அவர் நரகவாதி!'

இதுபற்றி அந்த மனிதர் ஒரு மாதம் வரை பல முறை வந்து ஹல்ரத் இப்னு அப்பாஸ்(ரலி) அவர்களிடம் விசாரித்தபடியே இருந்தார்.

ஒவ்வொரு முறையும் அவருக்கு ஹல்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள்,

'அவர் நரகவாதி! நரகவாதி!!'

என்றே தீர்ப்புச் சொல்லி வந்தார்கள்.

(முகாஷஃபத்துல் குலூப்)

ஓர் அறிவிப்பில் வருகிறது :

அல்லாஹ் சுப்ஹானஹுவ தஆலா பிரதி வெள்ளி தோறும் ஆறு இலட்சம் மக்களை நரகத்திலிருந்து விடுதலை அளிக்கின்றான்.

யாருடைய ஜும்ஆ நாள் ஸலாமத் உடையதாக விளங்குமோ, அவரின் மற்ற நாட்களும் முழுமை பெற்றதாக சாந்தி நிறைந்ததாகவே மிளிரும்' என்று எம்பெருமானார் (ஸல்-அம்) அருளியதாக ஹல்ரத் அனஸ் (ரலி) அறிவித்திருக்கிறார்கள்.

ஹல்ரத் கஅப் (ரலி) தெரிவிக்கிறார்கள் :

அல்லாஹ் பட்டணங்களில் மக்காவை மிகச் சிறப்பு வாய்ந்ததாக ஆக்கி வைத்திருக்கிறான்.

மாதங்களில் ரமலானை மிகச் சிறப்பு வாய்ந்ததாக ஆக்கி வைத்திருக்கிறான்.



அது போன்றே,

எல்லா நாட்களையும் விட ஜும்ஆ நாளை மிகச் சிறப்பு வாய்ந்ததாக ஆக்கி வைத்திருக்கிறான். எல்லா இரவுகளிலும் 'கத்ரு'டைய இரவை மிகச் சிறப்பு வாய்ந்ததாக ஆக்கி வைத்திருக்கிறான்.

பறவை, புழு பூச்சி இனங்கள் கூட ஜும்ஆ நாளன்று ஒன்றை ஒன்று சந்தித்துக் கொள்கின்றன.

சாந்தி நிலவுக! சாந்தி நிலவுக!! இது நல்ல நாள்!! என்று சந்தோசம் கொள்கின்றன.

—★—

# 4. ஜும்ஆ பற்றிய வரலாற்றுப் பின்னணி

கி. பி. 622-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் இருபத்தி எட்டாம் நாள்; ரபீஉல் அவ்வல் பிறை பன்னிரண்டு திங்கட் கிழமையன்று,

உத்தம திருநபி (ஸல்) அவர்கள் தங்களின் பிறந்த மண்ணான மக்காவைத் துறந்து (ஹிஜ்ரத்) செய்து திரு மதீனா நோக்கிப் பயணமானார்கள்.

வழியில் 'குபா' எனும் நன்னிலத்தில் தங்கினார்கள்.

அங்கே ஓர் இறை ஆலயத்தை தம் அருமைத் தோழர் 'மூஸ்அப்' என்பாரின் ஆலோசனைக்கேற்ப நிர்மாணித்தார்கள்.

இதுவே இஸ்லாமிய வரலாற்றில் 'கஅபா' எனும் முதல் பள்ளிக்கு அடுத்தபடியாக நிறுவப்பட்ட 'முதல் மஸ்ஜித்' ஆகும்.

அவ்வமயம் குபாவிலேயே தங்கியிருந்த கோமான் நபி (ஸல்) அவர்கள் அதற்கு மறுதினமான வெள்ளிக் கிழமையன்று மதீனா மாநகரை நோக்கிப் பயணத்தைத் துவங்கினார்கள்.

அப்பொழுது குபாவுக்கும் மதீனாவுக்கும் இடைப்பட்ட பள்ளத்தாக்கு ஒன்றை கடக்க நேரிட்டது. அங்குதான் ஜூம்ஆத் தொழுகை வல்ல நாயனால் முதன்முதலாக விதியாக்கப்பட்டது.

ஜூம்ஆவின் கடமை பற்றிய அல்லாஹ்வின் கட்டளை வரப் பெற்றதும் அங்கிருந்த மக்கள் அனைவரும் ஒன்று திரண்டு ஓரிடத்தில் குழுமினார்கள்.

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் ஜூம்ஆவின் குத்பாப் பேருரை நிகழ்த்தி, தாங்களே இமாமாக நின்று ஜூம்ஆவைத் தொழ வைத்தார்கள்.

இதுவே இம்மண்ணுலகில் நிறைவேற்றப்பட்ட மானிடர்களின் முதல் ஜூம்ஆத் தொழுகையாகும்.

நம் நாயகத் திருமேனி (ஸல்) அவர்கள் நின்று தொழுகை நடத்திய அப்புண்ணியமண்ணில் அங்கு வாழ்மக்கள் மஸ்ஜித் ஒன்றினை நிர்மாணித்துக் கொண்டார்கள்.

மஸ்ஜிதுல்-ஜூம்ஆ என்று பிற்காலத்தில் பிரசித்து பெற்று விளங்கிய இப்பள்ளிவாசல் இன்றுவரை அவ்விடத்தில நீங்காத நினைவுச் சின்னமாக காட்சி தந்து கொண்டிருக்கிறது

—★—

# 5. சமுதாயம் சிந்திக்க 'சரித்திரம்' பேசுகிறது

அன்றொரு நாள்.........

அல்லாஹ்வின் அருமைத் தூதர் மூஸா அலைஹிஸ்ஸலாத்து வஸ்ஸலாம் அவர்கள் பைத்துல் முகத்தஸ் எனப்படும் புனிதப் பள்ளிக்கு அருகாமையில் உள்ள மலைத்தொடர் ஒன்றின் பக்கம் நடந்து சென்று கொண்டிருந்தார்கள்.

அவர்களின் கண்கள் அங்கே தென்பட்ட காட்சி ஒன்றைக் கண்ட மாத்திரத்தில் மலைத்து நின்று விட்டன.

அந்த அபூர்வக் காட்சி நபியவர்களை ஆச்சரியத்தில் மூழ்க வைத்தது.

அங்கே பெருங்குன்றின் ஒருபுறம் மனிதக் கூட்டம் ஒன்று இறை வணக்கத்தில் ஈடுபட்டிருந்தது. இதுதான் நபி மூஸா (அலை) அவர்களின் வியப்பிற்குக் காரணமாயிருந்தது. அவர்களின் மனம் சந்தோஷத்தில் திளைத்தது. ஆனந்தமும், ஆச்சரியமும் அவர்களை அம்மக்கள் பக்கம் அழைத்துச் சென்றது.

''யா அல்லாஹ்! மனித நடமாட்டமே அபூர்வமான, மனிதத் தேவைகளே அற்றுப் போன இக்கானகத்தில் இப்படியும் ஒரு திருக்கூட்டமா?'' என்று அவர்களின் உள் மனம் எண்ணியது. அம்மக்களை அண்மிய நபி மூஸா (அலை) அவர்கள் 'நீங்கள் யார்?' என விசாரித்தார்கள்.

அதற்கு அந்த மக்கள்,

''எங்கள் நபியவர்களே! நாங்கள் எல்லோரும் தங்களின் உம்மத்தினர்கள். தங்களையும் தாங்கள் கொண்டு வந்த

மார்க்கத்தையும் ஏற்றுக் கொண்டவர்கள்'' என்று பதிலிறுத் தார்கள்.

இதைக் கேட்ட நபியவர்களுக்கு ஆனந்தம் அலை மோதியது.

'அப்படியா? நீங்கள் எல்லோரும் என் உம்மத்தினர் தானா? என்று வியப்புற்றவர்களாக அவர்களை விசாரிக்க லானார்கள்.

''நீங்கள் எவ்வளவு காலமாக இங்கே வசிக்கின்றீர்கள்? உங்களின் உணவுத் தேவைகள், ஏனைய பிரச்சினைகள் எவ்வாறு தீர்க்கப் படுகின்றன?''

அவர்கள் பதில் கூறலானார்கள்:

நபி அவர்களே!

நாங்கள் இங்கே எழுபது ஆண்டு காலமாக தங்கி, இறைவனை வணங்கி வழிபட்டு வருகிறோம்.

எங்களின் உணவு இங்கே முளைக்கின்ற இலை தழை களும், புற்பூண்டுகளுமாகும். 'பொறுமை' எனும் ஆடையை உடுத்தியும், மழை நீரை அமுத பானமாகவும் கருதி வாழ் கின்றோம். எங்களின் குறிக்கோள் 'இறைவழிபாடு மட்டுமே!'

இம்மனிதப் புனிதர்களின் தியாக சீலத்தை, தீன் வழிப் பற்றை எண்ணி எண்ணி வியந்து மகிழலானார்கள் நபி மூஸா (அலை) அவர்கள்,

அப்பொழுது அல்லாஹ் அவர்களுக்கு 'வஹீ' (இறைத் தூது) அனுப்பி வைத்தான்!

''நபி மூஸாவே! இங்கே உங்களின் உம்மத்தினர்கள் பெற்றுக் கொண்டிருக்கின்ற நன்மைகளை விட அதிகமான நன்மைகளைப் பெறப் போகின்றவர்களைப் பற்றி அறிந்து கொள்வீராக!



''இறுதிக் காலத்தில் 'முஹம்மத்' எனும் பெயர்கொண்ட எனதருமைத் தூதர் ஒருவர் தோன்றுவார். அவரே என் இறுதித்தூதர். அவருக்குப்பின் வேறு எந்தநபியும் தோன்றப் போவதில்லை. அவருக்கும் அவரைப் பின்தொடரும் சமூகத் தினருக்கும் ஒரு புனித நாளை நான் என் அன்புப் பரிசாக அளிக்க இருக்கின்றேன்.

''அத்திருநாளில் அவர்கள் எனக்காக இரண்டு ரக்அத்து கள் தொழுவதானது, உமது உம்மத்தினர்கள் வருந்தி வழி படுகின்ற இந்த எழுபது வருட வணக்கங்களைவிட பன்மடங்கு பதவியுடையதாக, அதிக நன்மைகளை அடைகின்றதாக இருக்கும்.''

அல்லாஹ்வின் வாயிலாக இந்த அற்புதத் தினத்தின் அறிவிப்பைக் கேட்ட நபி மூஸா (அலை) அவர்கள்,

''யா அல்லாஹ்! அது எந்த நாள்'' எனக் கேட்டார்கள்.

''அதுவே ஜும்ஆ நாள்!'' என்றான் இறைவன்.

ஜும்ஆ தினத்தின் தன்னிகரற்ற உயர் தன்மையை உணர்ந்து கொண்ட நபியுல்லாஹ் அவர்கள்,

''யா அல்லாஹ்! அச்சிறப்புமிகு ஜும்ஆ நாளை எனக்கும் என் உம்மத்தினருக்கும் வழங்குவாயாக!'' எனக் கெஞ்சிக் கேட்டார்கள். அப்போது அல்லாஹ்,

'நபி மூஸாவே! அந்நாளை உங்களுக்குத் தருவதற்கில்லை.

'ஏனெனில் ஒவ்வொரு நபிக்கும் ஒரு குறிப்பிட்ட நாளை சிறப்பு மிக்க நாளாக ஏற்படுத்தி விட்டேன்.

அந்த வரிசையிலே...

உமக்கு (நபி மூஸா) சனிக்கிழமை!

நபி ஈஸாவுக்கு ஞாயிற்றுக்கிழமை!

நபி இப்ராஹீமுக்கு திங்கட்கிழமை!

நபி ஜகரிய்யாவுக்கு செவ்வாய்க்கிழமை!

நபி எஹ்யாவுக்கு புதன்கிழமை!

நபி ஆதமுக்கு வியாழக்கிழமை!

நபி முஹம்மதுக்கு வெள்ளிக்கிழமை!'
என்று அறிவித்தான்.

இறுதித் தூதர் எம்பெருமானார் (ஸல்) அவர்களுக்கும் அவர்களின் உம்மத்தினருக்கும் கிடைக்க இருக்கின்ற இவ்வுயர் கொடையை அறியப் பெற்ற நபி மூஸா (அலை) அவர்கள் அந்த தினம் தங்களுக்குக் கிடைக்கவில்லையே என்ற ஏக்கம் கொண்டவர்களாக, நிராசைப் பட்டவர்களாக,

மீண்டும் இறைவனிடம் வேண்டி நின்றார்கள் :

''யாஅல்லாஹ்! ஜும்ஆ நாளை எனக்கு வழங்காவிடினும் என்னை அந்த நபி முஹம்மதுவின் உம்மத்தில் ஒருவனாக படைத்துவிடு!''

அல்லாஹ் அரவணைப்புடன் அப்போது அவர்களுக்கு அறிவித்தான் :

''நபி மூஸாவே! உமக்கு 'தவ்ருத்' எனும் எம் வேதத்தை தந்து, தூதராக நியமித்திருக்கிறேன்.

''இங்ஙனமிருக்க எவ்வாறு உம்மை அந்த இறுதிநபியின் சாதாரண ஒரு உம்மத்தினனாகப் படைப்பது?''

பிறகே, நபி மூஸா (அலை) அவர்கள் அமைதி கொண்டார்கள்.

சிந்தையைக் கவரும் இச்சீர்மிகு சம்பவம், நமது சமுதாய மக்களின் ஆழ்ந்த கவனத்திற்கு உரியதாகும்.

ஒரு மஹ பெரும் சமூகத்தவரின் நபியவர்களே நம்நெஞ்சில் நிறைந்த நபிமணி (ஸல்) அவர்களின் ஒரு சாதாரண உம்மத்தினராக தம்மை ஆக்கியருளும்படி அல்லாஹ்விடம் மன்றாடினார்கள் எனில்,



நம்மவர்களின் சிறப்பையும் நமக்கு அருளப்பட்டுள்ள ஜும்ஆவின் மகத்துவத்தையும் என்னவென்று சொல்வது, அதன் உயர்வை எவ்வாறு கோடிட்டுக் காட்டுவது?

இந்த அழியும் உலகின் சில அற்ப காசுகளுக்காக நம் சமுதாய வியாபாரிகளும், தொழிலாளர்களும் இம்மகோன்னத ஜும்ஆவைத் தவற விட்டு விடுகிறார்களெனில், அவர்கள் எவ்வளவு துர்ப்பாக்கியவான்கள் என்பதை நினைத்துப் பார்ப்பார்களாக!

—★—

## 6. கருணை நபி (ஸல்) அவர்களின் கோபம்

''நான் உங்களில் ஒருவரை, மக்களுக்குத் தொழவைக்கு மாறு பணித்துவிட்டு,

ஜும்ஆத் தொழுகைக்கு வருகை தராதோரின், வீடுகளை (நெருப்பால்) கொளுத்திவிட நாடுகிறேன்.''

(நூல் : முஸ்லிம்)

அனைத்துலகிற்கு அருட்கொடையாகவும், மனித வாழ்வின் பூர்ண முன்மாதிரியாகவும் வாழ்ந்துகாட்டிய பெருமானார் (ஸல்) அவர்களின் இந்த முத்திரை வாக்கை முக்கியத்துவத்துடன் படித்துப் பாருங்கள்.

நபிமணி (ஸல்) அவர்கள் யார்? பேருபகாரியாகத் திகழ்ந்தவர்களா? அல்லது சர்வாதிகாரியாகச் செயல் பட்டவர்களா?

சற்குணத்தின் சான்ருகவும், இரக்கத்தின் இருப்பிடமாகவுமல்லவா அண்ணலரர் நபி (ஸல்) அவனியிலே அரசோச்சினுர்கள்.

பல்உடைந்த நேரத்திலும் பகைவர்களிடம் பரிவு காட்டிய சரித்திரத்தை உலகம் மறக்குமா?

வஞ்சம் தீர்க்க வாய்ப்பிருந்தும் எதிரிகளுக்குத் தஞ்சம் அளித்து தயவு காட்டிய தயாளத்தைத்தான் யாரால் மறக்க இயலும்?

அத்தகைய காருண்ய நபி (ஸல்) அவர்களே 'ஜும்ஆத் தொழுகையில் பங்கு பெற வராதவர்களின் வீடுகளைத் தீயிட்டுக் கொளுத்த நாடுகிறேன்' என்று உரைத்தார்களெனில்,

இச்சிறப்புமிகு ஜும்ஆவின் முக்கிய கடமையை இனியென்ன வார்த்தையால் விளங்க வைப்பது?

''பிசாசுகூட சொர்க்கத்துப் பெண்ணாகக் காட்சி தருவாள் இருளையும் ஒளியையும் பிரித்தறியத் தெரியாதவனுக்கு'' என்று சிந்தனைச் சிற்பி சஅதி (ரஹ்) கூறுவது போன்று, இதுவரை நீங்கள் அறியாமை எனும் இருளில் ஜும்ஆவின் அருமை பெருமைகளை அறிய முடியாமல இருந்திருப்பீர்களெனில், இப்போதேனும் வெளிச்சத்திற்கு வாருங்கள்! தவறில இருந்ததை எண்ணி வருந்துங்கள்; தௌபாச் செய்து மீளுங்கள்!

இல்லையெனில் உங்களின் முடிவு அருவருக்கத்தக்கதாக ஆபத்துடையதாக முடிந்து விடும்.

உங்களின் பெயர் நல்லடியார் பட்டியலிலிருந்து அகற்றப் பட்டு விடும்.

வேதனைக்கும், சோதனைக்கும் உட்பட்டு விடுவீர்கள். (அல்லாஹ் காப்பானாக!)



மேலும், ஜும்ஆ மட்டுமே நம்மீது கடமை என்ற தவருன கணிப்பில், ஐவேளைத் தொழுகையை அறவே பேணுமல், வெள்ளிக்கிழமை மட்டும் 'வெள்ளை' உடுத்தி பள்ளி செல்லும் வராமுஸல்லி ஆகாதீர்கள்.

அல்லாஹ்வை வணங்கவே தலை உள்ளது! அவன் பெருமை பாடவே நாவு உள்ளது! அவன் காட்டும் பாதையில நடக்கவே கால்கள்.

'அல்லாஹு அக்பர்' என்று முழங்கி தொழுகையில் உயர்த்திக் காட்டவே கரங்கள்! அவற்றைப் பற்றி பிடிக்கவே விரல்கள்.

அவன் படைத்த உலகின் விநோதங்களைக் காணவே கண்கள்!

அவன் புகழ் பாடும் நல்லோரின் நல்லோசையைக் கேட்கவே செவிகள்!

என்கின்ற தத்துவத்தைப் புரிந்து, அருள்தரும் ஜும்ஆவுடன், ஐவேளைத் தொழுகையையும் பேணித் தொழுங்கள்.

—★—

# 7. ஜும்ஆ விளக்கம்

'ஜும்ஆ' எனும் அரபு மொழிச் சொல்லுக்கு 'ஒன்று கூடுதல்' எனப் பொருள்.

ஏனெனில் அன்றுதான் நன்மைகள் ஒன்று கூடுகின்றன;

அங்கும் இங்குமாக பற்பல திசைகளில் பிரிந்து வாழும் முஸ்லிம் பெருங்குடி மக்களும், பள்ளியில் ஒன்று கூடுகிறார்கள்.

ஜூம்ஆத் தொழுகை, வயது வந்த, புத்தி சுவாதீனம் உள்ள, ஆரோக்கியமான ஆடவரின் மீது கடமையாகும். பெண்களுக்கு ஜூம்ஆ கிடையாது.

ஹனபி மத்ஹபின்படி மூன்று நபர்கள் மட்டுமே இருந்த போதிலும் ஜூம்ஆ தொழுக வேண்டும். ஷாஃபி மத்ஹபின் படி குறைந்த பட்சம் 40 பேர் தேவை. இதை ஜமாஅத் துடன்தான் நிறைவேற்ற வேண்டும். பிற தொழுகைகளைப் போன்று தனித்து தொழுது கொள்ள இதற்கு அனுமதி இல்லை.

ஜூம்ஆவை தவற விட நேரிட்டால் அன்றைய லுஹரின் நான்கு ரக்அத் பர்ளுத் தொழுகையைத் தொழ வேண்டும்.

''வெள்ளிக்கிழமை தோறும் ஒவ்வொரு பள்ளிவாசலின் நுழைவாயில்களிலும் மலக்குகள் நின்று கொண்டு ஜூம்ஆத் தொழுகைக்கு வருகை தருவோரின் பெயர்களை வரிசைக் கிரமமாகத் தங்களின் பதிவேட்டில் பதிவு செய்கிறார்கள்.

இமாம் குத்பாப் பேருரையைத் துவக்கி விட்டால் அவ்வானவர்கள் தங்களின் பதிவேடுகளை மூடி விட்டு அங்கே நிகழும் சொற்பொழிவில் தாங்களும் பங்கு பெற பள்ளிக்குள் நுழைந்து விடுகிறார்கள்.

ஜூம்ஆத் தொழுகையை நிறைவேற்ற முதன்முதலாக பள்ளிவாசலுக்குள் நுழைபவர் ஓர் ஒட்டகையைக் குர்பானி செய்த நன்மையையும்,

அடுத்து வருபவர் ஒரு மாட்டைக் குர்பானி செய்த நன்மையையும்,

மூன்றாமவர், ஓர் ஆட்டைக் குர்பானி செய்த நன்மையையும்,



அதற்கடுத்தவர், ஒரு கோழியை, பின்னவர், ஒரு முட்டையைக் குர்பானி செய்த நன்மையையும் அடையப் பெறுகிறார்.

ஜூம்ஆவின் பாங்கு சொல்லப்பட்டதும், வியாபாரம் இன்னும் பிற அலுவல்களில் ஈடுபடுவது ஹராமாகும்.

மேலும் ஜூம்ஆவில் குத்பா ஓதப்படும் போது, துஆ தஸ்பீஹ், திக்ரு, ஸலவாத், தொழுகை முதலிய பிற வணக்கங்களில் ஈடுபடுவதும் விலக்கப் பட்டுள்ளது.

குத்பாவை செவி சாய்த்துக் கேட்காமல் இவைகளை அந்த நேரத்தில் செய்வதால் இவைகளுக்குரிய நன்மைகள் கொடுக்கப்பட மாட்டாது.

இங்ஙனமிருக்க குத்பா வேளையில் பேசுவதும், உறங்குவதும், வீணான வேலைகளில் ஈடுபடுவதும் எவ்வளவு பெரிய பாவ காரியங்கள் என்பதை உணர்ந்து செயல்படுவோமாக!

—✶—

## 8. விண்ணகத்தில் ஜூம்ஆத் தொழுகை

இம்மண்ணகத்தில் எங்கு நமது கிப்லாவான 'கஅபா' அமையப் பெற்றுள்ளதோ அதற்கும் நேர் மேலே விண்ணகத்தில் (நான்காவது வானில்) பைத்துல் மஃமூர் எனப் படுகின்ற மலக்குகளின் பள்ளிவாசல் அமையப் பெற்று உள்ளது.

இப்பள்ளியுடைய மினாராவின் உயரம் ஐநூறு ஆண்டுகள் தொலைவுள்ளது என்பதாக நூல்களில் காண்கிறோம்.

பிரதி வெள்ளி தோறும் இம்மிராவின் உச்சியில் ஏறி நின்று ஹஸ்ரத் ஜிப்ரயீல் (அலை) அவர்கள் ஜும்ஆவிற்காக பாங்கு கூறுகிறார்கள்.

ஹஸ்ரத் இஸ்ராஃபீல் (அலை) அவர்கள் இப்பள்ளியின் மிம்பர் மேடையில் ஏறி நின்று குத்பா ஓதுகிறார்கள்.

ஹஸரத் மீகாயீல் (அலை) அவர்கள் அங்கே குழுமுகின்ற மலக்குகளுக்கெல்லாம் இமாமாக முன்நின்று ஜும்ஆத் தொழ வைக்கிறார்கள்.

இவ்வாறாக, ஜும்ஆத் தொழுகை நிறைவேற்றப் பட்ட பின்,

ஹஸ்ரத் ஜிப்ரயீல் (அலை) அவர்கள், 'நான் கூறிய பாங்கிற்கு அல்லாஹ் வழங்கும் நன்மையை பூமியில் ஜும்ஆவிற்காகப் பாங்கு கூறிய 'முஅத்தின்'கள் அனைவருக்கும் வழங்குகிறேன்' என்பார்கள்.

இவ்வாறே ஹஸரத் இஸ்ராஃபீல் (அலை) அவர்கள், 'நான் நிகழ்த்திய குத்பாவின் நன்மையை பூமியில் குத்பா நிகழ்த்திய 'கத்தீபுகள்' அனைவருக்கும் வழங்குகிறேன்' என்பார்கள்.

ஹஸ்ரத் மீகாயீல் (அலை) அவர்கள், 'நான் இமாமத் செய்த நன்மையைப் பூமியில் இமாம்களாக நின்று ஜும்ஆத் தொழ வைத்த இமாம்களுக்கெல்லாம் வழங்குகிறேன்' என்பார்கள்.

மேலும், அவ்விண்ணகத்தில் ஜும்ஆத் தொழுகையை நிறைவேற்றிய மலக்குகளெல்லாம் 'நாங்கள் தொழுத இத்தொழுகையின் நன்மைகளைப் பூமியில் ஜும்ஆத் தொழுத யாவருக்கும் வழங்குகிறோம்' என்பார்கள்.



அப்பொழுது அல்லாஹுதஆலா அவர்களை நோக்கிக் கூறுவான்:

'மலக்குகளே!'

எனது அடியார்களுக்கு நீங்கள் வெகுமதி வழங்குகிறீர்களா?

வள்ளல்களுக்கெல்லாம் மாபெரும் வள்ளல் நானாக அல்லவா இருக்கிறேன்?

எனவே, நான் ஜும்ஆத் தொழுகையை நிறைவேற்றிய எனது அடியார்கள் எல்லோருடைய பாவங்களையும் பொறுத்து கொண்டதற்கு மன்னித்தருளியதற்கு நீங்கள் எல்லோரும் சாட்சிகளாக இருங்கள்.'

என்னே அல்லாஹ்வின் வள்ளல் தன்மை;

என்னே அவனது கருணை மழை!

—★—

# 9. வெள்ளி தந்த வெற்றிகள்

அனேக நபிமார்களுக்கு அல்லாஹ்வின் அருட்கொடைகள் வெள்ளிக்கிழமையில்தான் வெகுவாக வழங்கப் பட்டுள்ளன என்பதற்கு சரித்திரச் சான்றுகள் சாட்சியம் கூறுகின்றன

அவற்றில் சிலவற்றை இங்கே பாரீர்! அல்லாஹ்வின் பேரருளைப் பெற முயல்வீர்!!

★ நபி மூஸா (அலை) அவர்கள் கொடியவன் ஃபிர்அவ்னிட மிருந்து மீட்சி பெற்றது வெள்ளிக்கிழமையில்தான்!

★ நபி யூனுஸ் (அலை) அவர்களை மீன் வயிற்றிலிருந்து வெளியேற்றி இரட்சித்ததும் வெள்ளிக்கிழமையில்தான்!

நபி யூசுஃப் (அலை) அவர்களை நீண்ட இடைவெளிக்குப் பிறகு அன்னாரின் தந்தையார் நபி யாகூப் (அலை) அவர்கள் சந்திக்கின்ற சந்தோஷ வேளை ஏற்பட்டதும் வெள்ளிக்கிழமையில்தான்!

★ நபி நூஹ் (அலை) அவர்களின் கப்பல் புயல் ஓய்ந்து பத்திரமாகக் கரை சேர்ந்ததும் வெள்ளிக்கிழமைதான்!

நமதருமை நாயகம் (ஸல்) அவர்கள் தங்களது தாயார் ஆமினு அம்மையாரின் வயிற்றில் கர்ப்பம்தரித்ததும் வெள்ளிக்கிழமைதான்!

★ மேலும்,

நமது ஆதி பிதா ஆதம் (அலை) அவர்களின் திருமணம் ஹவ்வா அம்மையாருடனும்,

நபி யூசுஃப் (அலை) அவர்களின் திருமணம் ஜுலைகா அம்மையாருடனும்,

நபி மூஸா (அலை) அவர்களின் திருமணம் ஸஃபூரா அம்மையாருடனும்,

நபி சுலைமான் (அலை) அவர்களின் திருமணம் பல்கீஸ் அம்மையாருடனும், சிறப்பாக நடந்தேறியதுடன்,

நமது அன்னையர்களான ஹஸ்ரத் கதீஜா (ரலி), ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) ஆகியோரின் திருமணங்கள், எம்பெருமானார் முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுடன் நடைபெற்றதும் இதே வெள்ளிக்கிழமையில் தான்!

வெள்ளித் திருநாள்!
வெற்றிப் பெருநாள்!!

# 10. சீரழிவில் சில நபர்கள்

''முஸ்லிமுக்கும், முஸ்லிம் அல்லாதவருக்கும் வேறுபாடு தொழுகைதான்.

எவர் தொழுகையை மனம் அறிந்து தொழவில்லையோ, அவர் இஸ்லாத்தை விட்டும், வெளியேறி விட்டார்.''

(அல்-ஹதீஸ்)

இன்று வாழ்வின் மூலை முடுக்குகளில் நாம், பலதரப்பட்ட நபர்களைச் சந்திக்கிறோம். அவர்களிடம் தொழும்படி வேண்டினால், ''நான் என்ன செய்வது? நேரம் இருந்தால் தானே? தொழுகை அவசியம்தான், ஆனால் ஓய்வு எங்கே?'' போன்ற பல பிதற்றல் வார்த்தைகளைச் சொல்லி தப்பித்துக் கொள்ள முயற்சிக்கின்றார்கள். அவர்களின் இந்த 'சாக்குப் போக்குகள்' சரியானவை அல்ல! என்பதை அவர்களே உணரும் காலம் வெகு தூரமில்லை.

அல்லாஹ் மறுமையிலே தொழாத சிலரை அழைப்பான். அவர்களிடம் அதற்குரிய காரணம் வினவப்படும்.

அவர்கள் முறையிடுவார்கள் :-

''யா அல்லாஹ்! நீ எங்களுக்கு ஆட்சிப் பொறுப்பை அளித்திருந்தாய். நாங்கள் அதை கவனிப்பதிலும், நிர்வகிப்பதிலும் இருந்து வந்தோம். அதனால் உன்னை வணங்க ஓய்வு கிடைக்கவில்லை!''

அப்போது அல்லாஹ் இவ்வுலகில் பேரரசர்களாய் இருந்து பெருவாழ்வு வாழ்ந்த, நபிமார்களான தாவூத்(அலை), சுலைமான் (அலை) ஆகியோரை உதாரணம் காட்டிக் கூறுவான் :

ஏ மனித கூட்டமே! இவ்விருவருக்கும் உங்களைக்கான பன்மடங்கு பதவியும் பொறுப்பும் இருந்தன. அதிகார அலுவல்களும், ஆட்சிப் பணிகளும் குவிந்திருந்தன. இவர்கள் என்னை மறந்தா வாழ்ந்தார்கள்? இல்லையே..........! எனது வணக்கம் அவர்களின் வாழ்வில் இடைஞ்சலாக இருக்கவில்லையே! ஆனால், உங்களுக்கு மட்டும் அது எப்படி குறுக்கே நின்று 'நேரம்' தர மறுத்தது. எனவே, நீங்கள் பொய்யர்கள்! என்று கூறி அவர்களை நரகில் தள்ள உத்திர விடுவான்.

அடுத்து ஒரு கூட்டம் அல்லாஹ் முன் ஆஜர் படுத்தப் படும்.

அவர்களும் தொழாமல் இருந்ததைப் பற்றி விசாரணை செய்யப் படுவார்கள்.

"நாயனே! நாங்கள் நோயால் பீடிக்கப்பட்டு மிகவும் சிரமத்தில் இருந்தோம். அதனால்தான் எங்களால் தொழ இயலவில்லை" என்பார்கள்.

அப்போது, அல்லாஹ் அவர்களுக்கு அய்யூப் நபி (அலை) அவர்களை ஆதாரம் காட்டுவான்.

ஏ, மனித வர்க்கமே! பார் இந்த அடியாரை இவரை விடவா நீங்கள் நோயில் உழன்றீர்கள்? உடல் முழுவதும் சீர்கெட்டு புழுக்கள் மொய்த்த போதும் கூட இவர் என்னை தொழாமல் இருக்கவில்லையே......?

உங்களின் வணக்கத்திற்கு மட்டும் நோய் எப்படி இடராக இருந்தது......?

எனவே...... நீங்களும் பொய்யர்களே! எனக் கூறி அவர்களையும் நரகில் தள்ளுவான்.

இது போன்ற எண்ணற்ற உவமைகள் உலக மக்களுக்கு உண்மை நிலையை உணர்த்துகின்றன.



இதை மீண்டும், மீண்டும் படியுங்கள்! படிப்பினை பெற்று வாழுங்கள்!

'வளமான வாழ்வை' வல்ல ரஹ்மான் வழங்குவானாக!

—★—

## 11. இறைசாந்தி என்றும் பொழிக

அல்லாஹ்வின் அருமைத் தூதர் அண்ணலெம்பெருமானார் (ஸல்) அவர்களின் மீது உலக முஸ்லிம்கள் தங்களின் ஒவ்வொரு தொழுகையிலும் ஸலவாத்தும், ஸலாமும் கூறத் தவறுவதில்லை.

நபிமணி (ஸல்) அவர்கள் மீது ஸலவாத் ஓதத் தெரியாத முஸ்லிம்களே இருக்க முடியாது எனலாம்.

ஸுனனே அபூதாவூத்—ஸுனனே நிஸாயி ஆகிய மாபெரும் ஹதீதுக் கிரந்தங்களில் காணக் கிடைக்கிறது.

உம்மி நபி (ஸல்) உரைத்துள்ளார்கள்:

"யார் என் கப்ருக்கு அருகில் என் மீது ஸலவாத் ஓதுகின்றாரோ, அதை நானே கேட்கின்றேன்.

மேலும், யார் எங்கேனும் தூரத்திலிருந்து என் மீது ஸலவாத் ஓதுவாரோ அது என் வரைக் கொண்டு வந்து சேர்ப்பிக்கப் படுகிறது."

இதற்கென்றே வானவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்களின் வேலையே எங்கெல்லாம் எம்பெருமானார் (ஸல்)

அவர்களின் மீது ஸலவாத் ஓதப்பட்டாலும் அவற்றை அந்த மலக்குகள் சுமந்து சென்று நபி பெருமானார் (ஸல்) அவர்களின் திரு முன்னிலையில் சேர்ப்பிக்கின்றார்கள்.

'திப்ருனி' எனும் கிரந்தத்தில் வருகிறது:

உத்தம நபி (ஸல்) உரைத்துள்ளார்கள்:

''யார் தமது எழுத்துக்களில் ஸலவாத்தின் வாசகத்தை எழுதுவாரோ, எதுவரை அதில் என் பெயர் இடம் பெற்றிருக்குமோ அதுவரை அவர் மீது மலக்குகள் ஸலவாத் சொல்கிறார்கள்.

எங்கு எம்பெருமானார் (ஸல்) அவர்களின் திருநாமம் கேட்கப்படினும், படிக்கப்படினும் ஸலவாத் ஓதுவது அவசியமாகிறது.

ஒரே சபையில் பல முறை பெருமானார் (ஸல்) அவர்களின் உயர்நாமம் மொழியப் பட்டால் ஒவ்வொரு முறையும் அதைச் சொல்பவரும் கேட்பவரும் ஸலவாத் கூறவேண்டும் என்பதாக இமாம் தஹாவி (ரஹ்) அவர்கள் தெரிவிக்கிறார்கள்.

ஆனால் ஒரு முறை ஸலவாத் ஓதுவதுதான் அவசியம் என்றும், பிறகு ஓதுவதெல்லாம் 'முஸ்தஹப்பு' என்றுமே பலர் அபிப்பிராயம் சொல்கிறார்கள்.

'யார் முன்னிலையில், என் பெயர் மொழியப்பட்டும் அவர் என் மீது ஸலவாத்துக் கூறவில்லையோ அவர் உலோபி' என்றுரைத்தார்கள் ஏந்தல் நபி (ஸல்) அவர்கள்.

'துர்ருல் முக்தார்' எனும் மாபெரும் சட்ட நூலில் வருகிறது:



ஜும்ஆ குத்பாவின் போது நபிகளார் (ஸல்) அவர்களின் திருநாமம் வரப்பெற்றால் நாவுக்கு அசைவு தராது, மனதுக்குள் 'ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் என்று ஓத வேண்டும்.

(ஏனெனில், குத்பாவின் போது, பேசவோ, ஓதவோ அனுமதி இல்லை.)

மேலும் புத்தகங்களில் (ஸல்) என்றும், (ஸல்-அம்) என்றும் ஸலவாத்தைச் சுருக்கி எழுதியதைப் படிக்கும் போது அதை முழுமையாக 'ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்' என்று கூறவேண்டும்.

ஒலு இன்றி ஸலவாத் ஓதுவது ஆகும் என்ற போதிலும் ஒலுவுடன் ஓதுவதில் அதிகச் சிறப்புள்ளது.

துஆவுக்கு முன்னும், பின்னும், 'ஸலவாத்' ஓதுவதினால் அப்பிரார்த்தனைகள் அல்லாஹ்வின் சன்னிதானத்தில் அதி விரைவுடன் சென்றடைகின்றன.

இல்லையெனில், ''அவை நடுவில் தொங்கி நிற்கின்றன'' என்பதாக ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களும் இக்கருத்தின் படியே ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களும் தங்களின் அறிவிப்புகளில் தெரிவித்திருக்கிறார்கள்.

(திர்மதீ — திப்ருனி)

''வெள்ளிக் கிழமையின் இரவிலும், பகலிலும் என் மீது அதிகம் ஸலவாத் ஓதுங்கள்'' என்று எம்பெருமானார் (ஸல்) அவர்கள் இயம்பியுள்ளார்கள்.

இந்த ஹதீதின் விரிவுரையாளர்களில் சிலர், ''ஐநூறு முறை ஸலவாத்ஓதுவது அதிகம் என்ற கணக்கில் அடங்கும்'' என்று எழுதியிருக்கிறார்கள்.

எவ்வளவுக்கு எவ்வளவு அதிகஸலவாத் ஓதப்படுகிறதோ அவ்வளவுக்கவ்வளவு அதிக நன்மை என்பது வெளிப்படையான விஷயம்.

நபி ஸலவாத்தின் காரணமாக

நன்மைகள் பெருகுகின்றன!

ஆகார அபிவிருத்தியின் வாயில்கள் திறக்கின்றன!

மன நிம்மதி உண்டாகிறது!

ஆதலினுல் ஓதுவோம் வாரீர்!

"ஸல்லல்லாஹு அலா முஹம்மத்

ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்."

